**கோ.ம.சா.2–மா.தங்கராஜ்** **L.A.O.P.No. 438/2022** **17.11.2025**

**2, 3ம் கோருரிமையாளர்கள் தரப்பு குறுக்கு விசாரணை –**

எனது சொந்தஊர் மணிப்பாறைப்பட்டி ஆகும். நான் நிரந்தரமாக அங்குதான் குடியிருந்து வருகிறேன். முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்கள் நான் வழக்கறிஞரிடம் சொல்லித்தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமான விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்று கூறியுள்ளது பற்றி எனக்கு தெரிந்ததை சொல்லியுள்ளேன். நான் சாட்சி சொல்வதற்கு முன்பு ஆர்ஜித சொத்து சம்பந்தமான ஆவணங்கள் எதுவும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் சொத்து சம்பந்தமான விபரங்கள் எவ்வாறு தெரியும் என்று சொன்னால் நான் உள்ளூர், பக்கத்து காடு, அதனால் எனக்கு தெரியும். எனக்கு இந்த தாவா சொத்தை ஒட்டி எனக்கு சொத்து உள்ளது என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனக்கு விவசாயம் பற்றி விபரம் தெரியும். விவசாய நிலங்களை பொறுத்து யார் அனுபவித்து வருகிறார்களோ அவர்கள் பெயருக்கு பட்டாவும், வரிவிதிப்பும் போட முடியுமா என்றால் சரியல்ல. இந்த தாவா சொத்துக்கு பட்டா யார் பெயரில் இருந்தது, யார் அனுபவித்தார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது. தொழில் பூங்காவிற்கு நிலம் ஆர்ஜிதம் செய்ய 2015 லிருந்து அரசு தரப்பு விளம்பரம் கொடுத்து ஆர்ஜித நடவடிக்கை நடத்தி வருகிறது என்றால் சரிதான். இந்த ஆர்ஜித நிலத்திற்கு அந்தந்த நிலம் உடமையாளர் விசாரணைக்கு ஆஜராகி ஆவணங்களும், வாக்குமூலங்களும் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். இந்த நிலம் ஆர்ஜிதம் செய்யும் விபரம் 1ம் கோருரிமையாளருக்கு எப்பொழுது தெரிய வந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. 265/4ல் உள்ள நிலத்தை கருப்பம்மாளுக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த ஆவணத்தை நான் எதுவும் பார்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் கருப்பம்மாளுக்கு சொத்து எழுதிக் கொடுத்த விபரம் எனக்கு தெரியாது. ஊரில் பேசிக் கொண்டதை வைத்து

சொல்கிறேன். ஊரில் பேசிக் கொண்டதை கோமதி என்னிடம் சொல்லவில்லை. கருப்பம்மாள் என்பவருக்கு எந்த வருடம் செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தவிபரம் மற்றும் பதிவு செய்த விபரம் பற்றி எனக்கு தெரியாது. நான் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் எதுவும் வரவில்லை. கோமதியம்மாள் என்பவர் சொன்னதன்பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். நான் 50 வருடமாக விவசாயம் செய்து வந்ததாக சொல்லியுள்ளதற்கு ஆதாரங்கள் எதுவும் என்னிடம் இல்லை என்றால் சரிதான். இந்த ஆர்ஜித சொத்தை வாரிசு அடிப்படையில் யார்யார் அனுபவித்து வந்தார்கள் என்றால் சேதுராஜ் என்பவர் அனுபவித்து வந்தார். சேதுராஜ் என்பவர் எந்த வருடம் வரை அனுபவித்து வந்த விபரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சேதுராஜ் பெயரில் ஆர்ஜித சொத்து உள்ளது என்பதற்கு பட்டாவோ, பத்திரமோ எதையும் பற்றி நான் பார்த்ததில்லை. கருப்பம்மாள் என்பவர் தாவா ஆர்ஜித சொத்தை அனுபவித்து வந்ததற்கு பட்டவோ, பத்திரம் பற்றி நான் ஆவணம் எதுவும் பார்க்கவில்லை. நான் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்வதற்கு முன்பு 1ம் கோருரிமையாளர் ஆர்ஜித சொத்திற்கு 1ம் கோருரிமையாளர் பெயரில் பட்டா, தீர்வை ரசீதுகள் உள்ளதா என்பதை கேட்டேன். அவர்கள் வைத்திருப்பதாக சொன்னார்கள். நான் சாட்சி சொல்ல வருவதற்கு முன்பு கோ.சா.1 வழ்ககறிஞரிடம் தாவா சொத்திற்கான பட்டா, தீர்வை ரசீதுகள் கோமதியம்மாள் கொடுத்தார்களா என்று கேட்டதற்கு வழக்கறிஞர் எல்லாம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக சொன்னார். அவர்கள் தாக்கல் செய்ததாக சொன்ன ஆவணங்களை நான் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு எதையும் வாங்கி பார்க்கவில்லை. கோமதியம்மாள் என்பவர் நிரந்தரமாக எந்த ஊரில் குடியிருந்து வந்தார் என்றால் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு ஊரை விட்டு வெளியே சென்று விட்டார். 10 வருடங்களுக்கு முன்புதான் ஊருக்கு வந்தார். அவர் வீட்டை மணிப்பாறை பட்டியில் வீடு கட்டியுள்ளார். கோமதியம்மாள் மணிப்பாறை பட்டியில் குடியிருக்கவில்லை என்றும், தன் தாயார் வீடான கூத்திப்பாறையில் குடியிருப்பதாக சாட்சியம் சொல்லியுள்ளார் என்று சொன்னால் அது தவறு. கோமதியம்மாள் என்பவர் விவசாய நிலத்திற்கு அவரது தகப்பனார் வரும்போது வருவார். கோமதியம்மாள் தகப்பனார் பெயர் சேதுராஜ் எப்போது

இறந்தார் என்ற விபரம் எனக்குதெரியாது. அவர் இராணுவத்தில் பணி செய்தார். சேதுராஜ் சகோதர் பெயர் சோலைச்சாமி ஆகும். சோலைச்சாமி என்பவர் சேதுராஜ் என்பவருக்கு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்த விபரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் சேதுராஜ் என்பவர் விவசாயம் செய்ய வரும்போது சொல்லி தெரியும். சேதுராஜ் பொது சொத்துக்களை விடுதலை வாங்கியது பற்றி ஆவணங்கள் அடிப்படையில் நான் தெரிந்து கொள்ளவில்லை. சேதுராஜ் என்பவர் சொல்லித்தான் எனக்கு தெரியும். அவர் சொன்னதை சரியா என்று சோலைச்சாமியிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் அவர் ஊரில் இல்லை. சோலைச்சாமி ஊரில் இல்லாமல் எங்கு சென்றார் என்ற விபரம் பற்றி எனக்கு தெரியாது. சேதுராஜ் இறந்த பின்னர் தலையாரி கருப்பையா தேவர் என்பவர் தாவா சொத்தை விவசாயம் செய்து வந்ததற்கு ஆவணங்கள் எதுவும் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அவர் அனுமதியின் பேரில் விவசாயம் செய்வதாக சொன்னார். கருப்பையா தேவர் அனுமதியின் பேரில் விவசாயம் செய்து வந்ததை கோமதியம்மாளிடம் கேட்டு உறுதி செய்து கொண்டேனா என்றால் அவர் ஊரில். கருப்பையா தேவர் என்பவர் இந்த சொத்தை சுமார் 10 வருடம் விவசாயம் செய்து வந்தார். கடந்த 30 ஆண்டுகளாக தரிசு நிலமாக இருந்தது. சொத்தை யார் பயிர் செய்கிறார்கள், என்ன பயிர் செய்யப்பட்டது என்பதை கிராம நிர்வாக அலுவலர் கிராம வருவாய் கணக்கில் பதிவு செய்வார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கருப்பையா தேவர் என்பவர் இந்த தாவா நிலத்தை சுமார் 10 வருடங்கள் அனுபவித்து வருகிறார் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கருப்பையா தேவர் மகன் சிங்கராஜ் என்பவர் கோமதியம்மாள் என்பவருக்கு மாமா உறவு முறை என்றால் சரிதான். சிங்கராஜ், கோமதியம்மாள் ஆகியோர்களுக்கு எந்தவிதமான மனவருத்தமோ, சண்டை சச்சரவுகளோ எதுவும் கிடையாது என்றால் சரிதான். சிங்கராஜ் என்பவர் தாவா சொத்தை மணிப்பாறைப்பட்டி கூட்டுறவு வங்கியில் அடமானம் வைத்துள்ளார் என்றால் சரிதான். பின்னர் அவர் கடனை கட்டி பணம் பற்று ரசீது கூட்டுறவு வங்கியில் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். சிங்கராஜ் என்பவர் சோலைச்சாமியின் வாரிசுகளுக்கு ஒரு உறுதி மொழி பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி உறுதிமொழி பத்திரத்தில் தாவா சொத்தை உங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து,

தவறுதலாக அடமான வைத்துள்ளேன் என்று வேலம்மாள் வகையறாவுக்கு எழுதிக் கொடுத்துள்ளாரா என்றால் சரிதான். நவமணி என்பவர் எனது உடன்பிறந்த அண்ணன். எனக்கு இந்த நில ஆர்ஜித சொத்திற்கு அருகில் எனக்கு நிலம் இல்லை என்றும், இந்த வழக்கில் கோ.சா.1 ற்கு அனுசரணையாக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்தை பொறுத்து சோலைச்சாமிக்கும், அவரது சகோதரர் சேதுராஜ் என்பவருக்கும் வாய்மொழி பாகம் நடந்து அந்த பாகத்தில் சோலைச்சாமி என்பவருக்கு பாகம் கிடைத்து அவர் அனுபவித்து வந்தாரா என்றால் இல்லை. சோலைச்சாமி இறந்த பின்னர் அவரது மனைவி மற்றும் வாரிசுகள் அனுபவித்து வந்து, கிரையம் செய்து கிரையதாரர்கள் அனுபவித்து வந்தார்கள் என்றும், கோமதியம்மாள் என்பவருக்கு எந்தவித பாத்தியமோ, அனுபவமோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. இரண்டு அண்ணன், தம்பி இருக்கும்போது ஒருத்தருக்கும் மட்டும் வராது. இந்த வழக்கு சொத்தில் 3 கிரையங்கள் ஆன விபரம் பற்றி எனக்கு தெரியும். அந்த கிரையம் செல்லாது என்றும், அதை என்னை கட்டுப்படுத்தாது என்று கோமதியம்மாள் நடவடிக்கை எதுவும் எடுத்தார்களா என்றால் அந்த அம்மா ஊரில் இல்லாத சமயம்தான் மேற்படி சம்பவம் நடந்தது. சிப்காட் விசாரணைக்கு கோமதியம்மாள் சென்ற பின்னர் விசாரணையில் தாவா சொத்தில் ஏற்பட்ட கிரையங்கள் பற்றி தெரிந்தபின்பு அதை ரத்து செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்காததை பற்றி எனக்கு தெரியாது. வேலம்மாள் வகையறா உரிய கிரையங்கள் எழுதிக் கொடுத்ததால்தான் கோமதியம்மாள் அந்த கிரையங்களை ரத்து செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் கோருரிமையாளருக்கு இந்த ஆர்ஜித சொத்து எவ்வித பாத்தியமும் இல்லை என்றும் கோமதியம்மாள் என்பவர் கேட்டுக் கொண்டதன்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

L.A.O.P 451/2022 என்ற வழக்கு சமூகம் நீதிமன்றத்தில் சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலகம், சிப்காட், சாத்தூர் தாக்கல் செய்து 10.09.2025ம் தேதி எனக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்த வழக்கின் சர்வே எண்.265/5 ஆகும். இந்த தாவா

வழக்கின் சர்வே எண். 265/4 ஆகும். எனது நிலத்திற்கு பட்டா உள்ளது. அது 738 ஆகும். கோமதியம்மாள் நிலத்திற்கு தெற்கு திசையில் எனது நிலம் அமைந்துள்ளது. வடக்கே தாவா வழக்கின் சொத்து நிலம் உள்ளது.

**<u>2, 3ம் கோருரிமையாளர்கள் அனுமதியின்பேரில் குறுக்குவிசாரணை</u>**

L.A.O.P451/2022 என்ற வழக்கின் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று தனிவட்டாட்சியரால் முடிவு செய்ய முடியாமல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கானது 10.09.2025ல் தான் தீர்ப்பு வந்துள்ளது. இதன்மேல் அதில் உள்ள தரப்பினர் மேல் முறையீடு செய்வதற்கு கால அவகாசம் உள்ளது என்றால் சரிதான். இந்த ஆர்ஜித சொத்திற்கு சர்வே நம்பர் தெரியும் ஆனால் பட்டா நம்பர் எனக்கு தெரியாது. இந்த L.A.O.P451/2022 வழக்கு எனக்கு இறுதி முடிவு ஏற்படவில்லை என்று சொன்னால் வழக்கின் தீர்ப்பு முடிவு செய்யப்பட்டுவிட்டது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.